# *DEPOSITION OF WITNESS*
# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM

## CC No.435/2015

**PW: 6**

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.இராமலிங்கம் | Taluk : | உடையார்பாளையம் |
| Father's Name : | திரு.நடேசன் | Calling : | LW7 |
| Village : | வெத்தியார்வெட்டு | Age : | 64 |

Solemnly affirmed by Thiru.X.Gilbert Maria Julian, Bench Clerk Grade II in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 25th day of February 2026.

Signature of Witness.

(Accused Present. Assistant Public Prosecutor Grade I Present. Defence counsel present)

முதல் விசாரணை :

நான் வெத்தியார்வெட்டு என்ற கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் துணை பதிவாளர், பொது விநியோகத்திட்டம், பெரம்பலூர் ஆக பணிபுரிந்து 31.05.2019 அன்று பணி ஓய்வு பெற்று விட்டேன். 2012-2015 வரை கூட்டுறவு சார்பதிவாளர்/கள அலுவலர் திருவிடைமருதூர் ஆக கும்பகோணம் சரக துணைப்பதிவாளர் கட்டுப்பாட்டில் பணிபுரிந்தேன். திருவிடைமருதூர் சரக 15 தொடக்க வேளாண்மை கடன் சங்கங்கள், திருபுவனம் கூட்டுறவு பண்டக சாலை ஆகியவற்றை ஆய்வு செய்வது எனது பணியாகும். மேற்படி 15 தொடக்க வேளாண்மை கடன் சங்கத்தில் கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கடன் சங்கமும் ஒன்றாகும். 07.05.2013 அன்று Z814. கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் உர இருப்பு

மற்றும் விற்பனையை சரிபார்த்தபோது அதிக அளவு உர இருப்பு குறைவும், உர விற்பனை தொகையினை சங்க கணக்கிற்கு கொண்டு வராமலும், நிதி இழப்பு ஏற்பட்டிருந்தது. ஏற்பட்ட நிதி இழப்புகளை பட்டியலிட்டு நிதி இழப்பு தொடர்பாக சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கும்பகோணம் சரக துணைப்பதிவாளருக்கு அறிக்கை மூலம் பரிந்துரைத்தேன். அந்த அறிக்கையுடன் 3 பட்டியல்களை இணைத்து அனுப்பினேன். என்னிடம் காண்பிக்கப்படும் 07.05.2013 தேதியிட்ட பட்டியலுடன் கூடிய அறிக்கையில் உள்ள கையொப்பம் என்னுடையது. மேற்படி பட்டியலுடன் கூடிய அறிக்கை அ.சா.ஆ.3 ஆக அ.சா.3 ன் மூலம் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

2) உர இருப்பு பதிவேட்டின்படி யூரியா இருப்பு 11.450 டன் இருந்தது. சங்கத்தில் உள்ள யூரியா இருப்பை சரிபார்த்தபோது 1.700 டன் மட்டும் இருப்பு இருந்தது. இதில் இருப்பு குறைவு 9.750 டன் ஆகும். இதன் மதிப்பு ரூ.53,843.40 ஆகும். உர இருப்பு பதிவேட்டில் பக்கம் 2 ல் இருப்பு குறைவு பற்றி எழுதி கையொப்பம் செய்துள்ளேன். உர இருப்பு பதிவேட்டில் பக்கம் 2 அ.சா.ஆ.13 ஆகும். உர இருப்பு பதிவேட்டில் பொட்டாஷ் உர இருப்பை சரிபார்த்தபோது 3.100 டன் இருப்பு இருந்தது. சங்கத்தில் உள்ள பொட்டாஷ் உர இருப்பை சரிபார்த்தபோது 0.750 டன் இருப்பு இருந்தது. இதில் 2.350 டன் இருப்பு குறைவு இருந்தது. அதன் மதிப்பு ரூ.39,480/- ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் உர இருப்பு பதிவேட்டில் பக்கம் 11ல் உள்ள பொட்டாஷ் உர இருப்பு

குறைவு பற்றி குறிப்பிட்டு கையொப்பம் செய்துள்ளேன். உர இருப்பு பதிவேடு பக்கம் 11 அ.சா.ஆ.14 ஆகும். உர இருப்பு பதிவேட்டில் DAP உர இருப்பினை சரிபார்த்தபோது 2.650 டன் இருப்பு இருந்தது. சங்கத்தில் உள்ள உர DAP உர இருப்பினை சரிபார்த்தபோது DAP உரம் எதுவும் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் உர இருப்பு பதிவேட்டில் பக்கம் 21ல் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். உர இருப்பு பதிவேட்டில் பக்கம் 21 அ.சா.ஆ.15 ஆகும்.

3) கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் 16.04.2013 அன்று ரூ.2676.12 மதிப்புள்ள உரங்களில் யூரியா 50 கிலோ, DAP 100 கிலோ விற்பனை செய்யப்பட்டுள்ளது. இத்தொகை சங்க கணக்கில் 16.04.2013 அன்று கொண்டு வரப்படவில்லை. 29.04.2013 அன்று ரூ.8,784.48 மதிப்புள்ள உரங்களில் யூரியா 200 கிலோ, DAP 250 கிலோ, பொட்டாஷ் 100 கிலோ விற்பனை செய்யப்பட்டு இத்தொகை சங்க கணக்கில் 29.04.2013 அன்று கொண்டு வரப்படவில்லை.

4) கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் 30.03.2013 அன்று உர விற்பனை தொகை ரூ.65,777.64 என பதியப்பட்டுள்ளது. இந்த உர விற்பனைக்கான உர பில், சிட்டா சங்கத்தில் எழுதப்படவில்லை. நான் 07.05.2013 அன்று ஆய்வு செய்தபோது கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் பொறுப்பு செயலாளராக திரு.ஜோசப் மார்ட்டின் பணியாற்றினார். அவர் முன்னிலையில் உர இருப்பு குறைவு, உர விற்பனை விடுதல் மற்றும் பில்

போடாமல் உரம் விற்பனை செய்ததற்கான பட்டியல் தயார் செய்து பொறுப்பு செயலாளர் திரு.ஜோசப் மார்ட்டினிடம் கையொப்பம் பெற்றுள்ளேன். மேற்படி சங்கத்தை ஆய்வு செய்தபோது 18.10.2012 வரையிலான உர விற்பனைக்குரிய பில் புத்தகம் 07.05.2013 அன்று ஆய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை, மேலும் 2 தினங்களுக்குள் சமர்ப்பிக்கிறேன் என பொறுப்பு செயலாளர் திரு.ஜோசப் மார்ட்டின் கைப்பட எழுதி கையொப்பம் செய்துள்ளார். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :

5) கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் எனது பணி ஆய்வு செய்வது ஆகும், துணைப்பதிவாளர் ஆணையிட்டால் விசாரணை செய்வதும் எனது பணியாகும். எத்தனை முறை கடன் சங்கங்களுக்கு ஆய்வு மேற்கொள்வேன் என்றால் 3 மாதங்களுக்கு ஒரு முறை 15 சங்கங்களுக்கும் ஆய்விற்கு செல்வேன். நான் ஆய்வு மேற்கொள்வதற்கு என்று தனிப்பதிவேடு உள்ளதா என்றால் தனி பதிவேடு எதுவும் இல்லை. ஆய்வு செய்வதற்கு தனி பதிவேடு உண்டு என்றாலும் எந்த அதிகாரியாக இருந்தாலும் ஆய்வு செய்ததில் கையொப்பம் செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. எனது பணி காலத்தில் கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு எத்தனை முறை ஆய்விற்கு சென்றிந்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் தீர்மான புத்தகத்தின் படி பதிவேடுகளை யார் பராமரிப்பது என்று எனக்கு குறிப்பிட்டு தெரியுமா என்றால்

செயலாளர். ஒவ்வொரு கூட்டுறவு கடன் சங்கத்திலும் யார் யாருக்கு எந்த பணி என்று தீர்மானம் போட்டு அதன்படி நிர்வாகம் செய்வது தான் இயல்பு என்றால் சரிதான். அவ்வாறு இந்த சங்கத்தில் யார் யார் எந்த பணி செய்வது என்று போடப்பட்ட தீர்மானம் எனக்கு ஞாபகம் இல்லை. கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் பதிவேடுகளை பராமரிப்பது திரு.சங்கர நாராயணன் என்ற எழுத்தர் என்றால் சரியல்ல. நான் மேற்படி சங்கத்தில் ஆய்வு மேற்கொண்ட சமயத்தில் எதிரி ஜோசப் மார்ட்டின் மோட்டார் வாகன விபத்தில் சிக்கி எலும்பு முறிவு ஏற்பட்டு வீட்டில் தான் இருந்தார் என்றால் சரியல்ல, நான் சென்றபோது அவர் முன்னிலையில் தான் ஆய்வு செய்து கையொப்பம் பெற்றேன்.

6) அ.சா.ஆ.3 ஆவணத்தில் உரம் இருப்பு குறைவு கண்டுப்பிடிக்கப்பட்டு துணைப்பதிவாளருக்கு அனுப்பிய அறிக்கையில் செயலாளர் பொறுப்பு ஜோசப் மார்ட்டின் கையொப்பம் ஒரு மையினாலும் அதற்கு மேல் உள்ள சங்கதிகள் வேறொரு மையினாலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சங்கதிகள் எனது பேனாவினாலும், கையொப்பம் ஜோசப் மார்ட்டின் பேனாவினாலும் எழுதப்பட்டுள்ளது. சங்கதிகள் முழுவதும் நானே எழுதினேன். அ.சா.ஆ.13 ஆவணத்தில் எழுத்தர் விற்பனையாளர் என்ற காலத்தில் சுருக்கொப்பம் போடப்பட்டுள்ளது, செயலாளர் என்ற காலத்தில் சுருக்கொப்பம் போடப்படவில்லை என்றால் சரிதான். செயலாளர் ஏன் கையொப்பம் செய்யவில்லை என்று ஆய்வு செய்தபோது விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. அ.சா.ஆ.14 ல் உர இருப்பு

பதிவேடு பக்கம் 11-ல் எழுத்தர் கையொப்பம் இல்லை, செயலாளரின் கையொப்பம் மட்டும் உள்ளது, எழுத்தரின் கையொப்பம் ஏன் இல்லை என்று நான் விசாரிக்கவில்லை. அ.சா.ஆ.15 ஆவணத்தில் உர இருப்பு பதிவேடு பக்கம் 23-ல் எழுத்தர் உள்ளது, செயலாளரின் கையொப்பம் இல்லை, செயலாளரின் கையொப்பம் ஏன் இல்லை என்று நான் விசாரிக்கவில்லை. அ.சா.ஆ.3 ஆவணத்தில் துணைப்பதிவாளருக்கு அனுப்பிய தனி அறிக்கை பட்டியலில் ஒரே நாளில் எழுதப்பட்டதா என்றால் ஒரே நாளில் எழுதப்பட்டது தான் ஆனால் பட்டியலை சங்கத்தில் தயார் செய்து தனி அறிக்கையினை என்னுடைய அலுவலகத்தில் எழுதினேன். மேற்படி அறிக்கை ஒரே நாளில் ஒரே நபரால் எழுதப்பட்டிருந்தபோதிலும் வெவ்வேறு பேனாவினால் எழுதப்பட்டிருப்பதற்கு காரணம் பட்டியலில் கார்பன் நகல் வைக்க வேண்டும் என்பதால் பால்பாயிண்ட் பேனாவினால் எழுதினேன், அறிக்கையை அலுவலகத்தில் இங்க் பேனாவினால் எழுதினேன். 30.03.2013 அன்று உர விற்பனை தொகை ரூ.65,777.64 என பதியப்பட்டுள்ளது. இந்த உர விற்பனைக்கான உர பில், சிட்டா சங்கத்தில் எழுதப்படவில்லை என்றும், நான் 07.05.2013 அன்று ஆய்வு செய்தபோது கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் பொறுப்பு செயலாளராக திரு.ஜோசப் மார்ட்டின் பணியாற்றினார் என்றும், அவர் முன்னிலையில் உர இருப்பு குறைவு, உர விற்பனை விடுதல் மற்றும் பில் போடாமைக்கு எனது ஆய்வறிக்கையில் இது சம்மந்தமாக ஏதேனும் ஆவணங்களை சமர்ப்பித்தேனா என்றால் இல்லை. கூட்டுறவு கடன் சங்கத்தில் பெரும்பாலும்

தலைவர் அரசியல் கட்சியை சேர்ந்தவராக இருப்பார் என்றால் இருக்கலாம்.

7) நான் ஆய்விற்கு சென்றபோது கிருஷ்ணாபுரம் கூட்டுறவு கடன் சங்கத்தின் தலைவர் யார் என்று விசாரித்தேனா என்றால் இல்லை. ஆய்வு செய்யும்போது சங்கத்தின் தலைவரை வைத்து கொண்டு ஆய்வு செய்யும் பழக்கம் உண்டா என்றால் இல்லை. நான் சொன்ன நாள், நேரத்தில் நான் சொன்ன கூட்டுறவு கடன் சங்கத்தில் எந்த வித ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை என்றால் சரியல்ல. நான் ஆய்விற்கு போனதாக சொல்லும் சமயத்தில் இந்த வழக்கின் எதிரி விபத்தில் சிக்கி படுத்த படுக்கையாக இருந்தார் என்றால் சரியல்ல. நான் ஆய்வு செய்ததாக சொல்லப்படும் நேரத்தில் சங்கத்தின் செயலாளர் சங்கத்தில் இல்லை என்றாலும், வீட்டில் தான் இருந்தார் என்றாலும் சரியல்ல.

8) இந்த எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும், சங்கத்தில் பணிபுரியும் மற்ற பணியாளர்கள் மற்றும் தலைவர் சேர்ந்து ஏற்படுத்தப்பட்ட இழப்பிற்கு காழ்ப்புணர்ச்சி காரணமாக தலைவர் மற்றும் மேலதிகாரிகள் கேட்டுக் கொண்ட காரணத்தினால் இவ்வாறு செயலாளர் தான் காரணம் என்று பொய்யாக ஆவணங்களை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூட்டுறவு கடன் சங்கத்தில் எதிரியிடம் கையொப்பம் பெறவில்லை என்றாலும், ஆய்வு செய்த 5 நாட்கள் கழித்து எதிரியை ஆட்டோவில் சங்கத்திற்கு அழைத்து வந்து சும்மா கையொப்பம் செய்யுங்கள் எதுவும் பிரச்சனை வராது என்று சொல்லி கையொப்பம் பெற்றேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு சம்பவத்திற்கும்

**எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.**

**<u>மறு விசாரணை</u> : இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him to be Correct.*

*Sd/S.Mahalakshmi,*
*Chief Judicial Magistrate,*
*Thanjavur at Kumbakonam*